1. When free accommodation is provided during the official tour, what is the eligible D.A?

(A) 25% (B) 50%

(C) 75% (D) 100%

அலுவல் பயணத்தின் போது இலவச தங்கும் வசதி அளிக்கப்பட்டிருக்கும் எவ்வளவு சதவிகிதம் தினப்படி வழங்கலாம்?

(A) 25% (B) 50%

(C) 75% (D) 100%

2. Govt. Department preparing proforma Accounts

(A) Police Dept (B) Fire Service Dept.

(C) Jail Dept. (D) Revenue Dept.

புரோபார்மா கணக்குகள் தயார் செய்யும் அரசுத்துறை

(A) காவல்துறை (B) தீயணைப்புத் துறை

(C) சிறைத்துறை (D) வருவாய்த் துறை

3. Charged expenditure from Consolidated fund

(A) Salary of Ministers (B) Salary of District Collector

(C) Salary of High Court Judges (D) Expenditure of Revenue Dept.

ஒருங்கிணைந்த நிதியின் கீழ் சுமத்தப்பட்ட செலவினங்கள் (Charged expenditure)

(A) அமைச்சர்களின் ஊதியம் (B) மாவட்ட ஆட்சித் தலைவர் ஊதியம்

(C) உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம் (D) வருவாய்த்துறை செலவினங்கள்

4. Who has the power to sanction relief amount upto Rs.20.00 lakhs to the people affected by natural calamities?

(A) Commissioner of Revenue Administration

(B) District Revenue Officer

(C) Deputy Collector

(D) District Collector

இயற்கை இடர்பாடுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.20.00 இலட்சம் வரை நிவாரணம் வழங்க ஒப்பளிப்பு ஆணை வழங்க அதிகாரம் பெற்றவர் யார்?

(A) வருவாய் நிர்வாக ஆணையர்

(B) மாவட்ட வருவாய் அலுவலர்

(C) துணை ஆட்சியர்

(D) மாவட்ட ஆட்சியர்

5. Sub-vouchers to be admitted and enclosed with the bills for the amount which is exceeding?

(A) Rs. 5,000 (B) Rs. 1,000

(C) Rs. 500 (D) Rs. 250

எத்தொகைக்கு மேற்பட்ட துணை வவுச்சர்கள் ஒப்பளிக்கப்பட்டு பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்?

(A) ரூ. 5,000 (B) ரூ. 1,000

(C) ரூ. 500 (D) ரூ. 250

6. In which office, amount to be remitted in Govt. head at Chennai

(A) State Bank (B) Pay and Accounts Office

(C) District Treasury (D) Reserve Bank

அரசுக் கணக்கில் செலுத்தப்படும் தொகை சென்னையில் செலுத்த வேண்டிய இடம்

(A) ஸ்டேட் பேங்க் (B) சம்பள கணக்கு அலுவலகம்

(C) மாவட்ட கருவூலம் (D) ரிசர்வ் பேங்க்

7. Advance without interest

(A) Marriage Advance (B) Education advance

(C) Vehicle advance (D) House Building advance

வட்டியில்லா முன்பணம்

(A) திருமண முன்பணம் (B) கல்விக்கான முன்பணம்

(C) வாகனம் வாங்க முன்பணம் (D) வீடுகட்டும் முன்பணம்

8. Eligible advance for purchasing car to a Govt. servant drawing salary below 3rd grade

(A) Rs. 6 lakh (B) Rs. 5 lakh

(C) Rs. 3 lakh (D) Rs.1 lakh

ஊதிய தொகுப்பு 3-ம் நிலைக்கு கீழ் உள்ள அரசு அலுவலருக்கு தகுதியுள்ள அதிகபட்ச மோட்டார் கார் முன்பணம்

(A) ரூ. 6 இலட்சம் (B) ரூ. 5 இலட்சம்

(C) ரூ. 3 லட்சம் (D) ரூ.1 இலட்சம்

9. Advance may be given based on the approximate expenditure to be borne under Transfer Travelling Allowance

(A) 100 % (B) 80 %

(C) 50 % (D) 75 %

மாறுதல் பயணப்படியில் உத்தேச செலவுத் தொகையில் முன்பணமாக வழங்கக்கூடியது

(A) 100 % (B) 80 %

(C) 50 % (D) 75 %

10. D.A. to Govt. Servant on 1.1.2016

(A) 113 % (B) 119 %

(C) 125 % (D) 132 %

1.1.2016 அரசு ஊழியருக்கு வழங்கப்பட்ட அகவிலைப்படி

(A) 113 % (B) 119 %

(C) 125 % (D) 132 %

11. Lumpsum grant admissible to one Deputy Collector (GP Rs. 5,400) who transferred from Coimbatore to Dindugal (142 km)

(A) Rs. 525 (B) Rs. 975

(C) Rs. 1,425 (D) Rs. 1,800

ஒரு துணை ஆட்சியர் (தர ஊதியம் ரூ.5,400) கோவையிலிருந்து திண்டுக்கல்லுக்கு (142 கி.மீ) மாற்றப்பட்டார். அவருக்கு தகுதியுள்ள ஒட்டு மொத்த மான்யம்

(A) ரூ. 525 (B) ரூ. 975

(C) ரூ.1,425 (D) ரூ. 1,800

12. Superintendent working at Chennai Head office drawing Grade Pay of Rs. 4,800 is eligible for DA of what amount when he travel out of Chennai

(A) Rs. 150 (B) Rs. 300

(C) Rs. 200 (D) Rs. 400

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள ரூ.4,800 தர உதியம் பெறும் கண்காணிப்பாளர் சென்னைக்கு வெளியே செல்லும் போது தகுதியுள்ள தினப்படி

(A) ரூ.150 (B) ரூ. 300

(C) ரூ. 200 (D) ரூ. 400

13. Selection Grade / Special grade pay fixation rule

(A) FR. 22(b)

(B) FR. 22(1) a (1) 22(b)

(C) F.R. 22(b) sub rule 5

(D) F.R 22(b) sub rule 35

தேர்வு நிலை / சிறப்பு நிலை ஊதிய நிர்ணய விதி

(A) அ.வி. 22(ஆ)

(B) அ.வி 22(1) (அ)(1) 22(ஆ)

(C) அ.வி. 22(ஆ) து.வி. 5

(D) அ.வி. 22(ஆ) து.வி. 35

14. Amount arrived as Rs. 490.20 while calculating Notional increment of 3%, amount to be fixed as

(A) Rs. 490 (B) Rs. 500

(C) Rs. 491 (D) Rs. 490.20

கருத்தியலான ஊதிய உயர்வு 3% கணக்கிடும் போது வரும் ரூ.490.20 என்பது நிர்ணயிக்கப்பட்ட வேண்டிய தொகை

(A) ரூ. 490 (B) ரூ. 500

(C) ரூ. 491 (D) ரூ. 490.20

15. Allowance not eligible for surrender leave

(A) Hill Allowance (B) Medical Allowance

(C) House Rent Allowance (D) Dearness allowance

ஒப்படைப்பு விடுப்பு காலத்தில் தகுதியில்லாத ஊதிய இனம்

(A) மலை வாழ் படி (B) மருத்துவப்படி

(C) வாடகைப்படி (D) அகவிலைப்படி

16. Procedures to be followed while purchasing things in Govt. officer is as per ———————— code (விதித் தொகுப்பு)

(A) Treasury code (B) Financial code

(C) Fundamental Rules (D) Receipt and payment Account

அரசு அலுவலகத்தில் பொருட்கள் வாங்குகையில் கடைபிடிக்க வேண்டிய முறைகளைப் பற்றி தெரிவிக்கும் விதித் தொகுப்பு

(A) கருவூல விதி தொகுப்பு (B) நிதி விதி தொகுப்பு

(C) அடிப்படை விதிகள் (D) வரவு செலவு கணக்கு

17. A women Govt. servant is eligible for next maternity leave if she has ———————— child which is alive

(A) 3 child (B) 2 child

(C) 1 child (D) None of the above

திருமணம் ஆன ஒரு பெற்ற அரசு ஊழியருக்கு எத்தனை குழந்தை உயிருடன் இருந்தால் அடுத்த மகப்பேறு விடுப்புக்கு தகுதியாவர்.

(A) 3 குழந்தைகள் (B) 2 குழந்தைகள்

(C) 1 குழந்தை (D) இவற்றில் ஏதுமில்லை

18. UEL on MC. with full pay is granted as per which rule

(A) TN leave rules 13 (B) Fundamental Rule 18

(C) F.R. 58 (D) TNLR 15

மருத்துவச் சான்றின் பேரிலான ஈட்டா விடுப்பு முழு சம்பளத்துடன் எந்த விதியின் கீழ் வழங்கப்படுகிறது.

(A) த.நா.விடுப்பு விதி 13 (B) அடிப்படை விதி 18

(C) அடிப்படை விதி 58 (D) த.நா.வி.விதி 15

19. A Govt. servant travelling with his 4 years old son by train on transfer, which one is eligible for his son

(A) ½ ticket fare + ½ DA + FTA (B) ½ D.A. only

(C) ½ D.A. + full FTA (D) ½ ticket fare + D.A. + Full FTA

இட மாறுதலில், இரயிலில் அழைத்துச் செல்லப்பட்ட அரசு ஊழியர்களின் 4 வயது மகனுக்கு தகுதியானது

(A) ½ டிக்கட் + ½ தினப்படி + FTA (B) ½ தினப்படி மட்டும்

(C) ½ தினப்படி + முழு FTA (D) ½ டிக்கட் + தினப்படி + முழு FTA

20. One who avails leave without M.C. during his transit period which is eligible for joining time

(A) preparation days and travelling period

(B) only preparation days

(C) only travelling period

(D) not eligible

ஒரு அலுவலர் பணியேற்பிடைக் காலத்தில் இருக்கும் போது மருத்துவச் சான்றுடன் அல்லாத வேறு விடுப்பில் சென்றால் அவருக்கு தகுதியான பணியேற்பிடைக் காலம்

(A) தயாரிப்பு காலம் மற்றும் பயணம் காலம்

(B) தயாரிப்பு காலம் மட்டும்

(C) பயணம் காலம் மட்டும்

(D) தகுதியில்லை

21. A Govt. servant while on transfer, within how many months from the date of joining in the new station he will bring the family members to the new station

(A) 1 month (B) 3 months

(C) 6 months (D) 1 year

பணி மாற்றம் செய்யப்பட்ட அரசு ஊழியர் புதிய இடத்தில் பணயேற்ற நாளிலிருந்து எத்தனை மாத காலத்திற்குள் அவரது குடும்ப உறுப்பினர்கள் பயணம் மேற்கொள்ளலாம்?

(A) 1 மாதம் (B) 3 மாதங்கள்

(C) 6 மாதங்கள் (D) 1 ஆண்டு

22. Under what rule, the advance of Transfer Travelling Allowance will be given while on transfer

(A) TNF.C 1 - Rule 84

(B) TNFC 1 - Rule 239

(C) TNFC 1 - Rule 28

(D) TNFC 1 - Rule 16

இடமாற்றத்தில் போது மாறுதல் பயணப்படி முன் பணம் எந்த விதிகளின் படி வழங்கப்படுகிறது

(A) த.நா.நிதி தொகுப்பு விதிகள் 1 - விதி எண். 84

(B) த.நா.நிதி தொகுப்பு விதிகள் 1 - விதி எண். 239

(C) த.நா.நிதி தொகுப்பு விதிகள் 1 - விதி எண். 28

(D) த.நா.நிதி தொகுப்பு விதிகள் 1 - விதி எண். 16

23. Normal retirement pension is given as per which rule?

(A) P.R. 36 (B) P.R. 32

(C) P.R 49 (D) P.R. 66

வயது முதிர்வு ஓய்வூதியம் எந்த விதியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது?

(A) ஓ.வி. 36 (B) ஓ.வி. 32

(C) ஓ.வி. 49 (D) ஓ.வி. 66

24. What kind of leave will be eligible for a Govt. servant who is under suspension?

(A) Earned leave (B) UEL on M.C

(C) UEL on PA (D) not eligible

தற்காலிக பணநீக்க காலத்தில் உள்ள ஒரு அலுவலருக்கு எந்த வகையான விடுப்பு எடுக்க தகுதி உண்டு

(A) ஈட்டிய விடுப்பு (B) மருத்துவ சான்றுடன் கூடிய ஈட்டா விடுப்பு

(C) சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பு (D) தகுதியில்லை

25. Register showing the bills to be submitted to Treasury is

(A) TNTC 58 (B) TNTC 62

(C) TNTC 70 (D) None of the above

கருவூலத்தில் அளிக்கும் பட்டியல்களின் விவரம் அடங்கிய பதிவேடு

(A) த.நா.க.வி 58 (B) த.நா.க.வி 62

(C) த.நா.க.வி 70 (D) இவற்றில் ஏதுமில்லை

26. The temporary advance to be adjusted within ———————— months.

(A) 2 (B) 5

(C) 3 (D) 6

தற்காலிக முன்பணம் பொதுவாக எத்தனை மாதங்களுக்குள் சரி கட்டப்பட வேண்டும்

(A) 2 (B) 5

(C) 3 (D) 6

27. How will the arrear contribution amount be recovered from pay under contributing pension scheme?

(A) Single instalment

(B) Equal instalment

(C) Additional instalment in current month for arrear

(D) None of these

பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தில் நிலுவைச் சந்தா தொகை ஏதேனும் இருப்பின் அவர்களது ஊதியத்திலிருந்து எவ்வாறு பிடித்தம் செய்யப்படும்?

(A) ஒரே தவணையில்

(B) சமமான தவணையில்

(C) நடப்பு மாதத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் கூடுதல் தவணைத் தொகை

(D) இவற்றில் ஏதுமில்லை

28. Which above of the following is not qualifying service?

(A) Joining time

(B) EOL with MC

(C) Training period

(D) Leave loss of pay without M.C

கீழ்க்கண்டவற்றுள் எது பணிக்காலமாக கருதப்படுவதில்லை?

(A) பணியேற்பிடைக் காலம்

(B) மருத்துவச் சான்றுடன் கூடிய அசாதாரண விடுப்பு

(C) பயிற்சி காலம்

(D) மருத்துவச் சான்றின்றி சம்பளமில்லா விடுப்பு

29. How many maximum days of unavailed joining time will be credited to Earned leave account?

(A) 15 days (B) 30 days

(C) 45 days (D) 60 days

அனுபவிக்காத பணியேற்பிடைக்காலம் அதிகபட்சமாக எவ்வளவு நாட்கள் ஈட்டிய விடுப்பு கணக்கில் ரவு வைக்கப்படும்.

(A) 15 நாட்கள் (B) 30 நாட்கள்

(C) 45 நாட்கள் (D) 60 நாட்கள்

30. Which Officers eligible for leave for higher studies?

(A) Probationers

(B) 5 years service not completed

(C) (A) and (B) grade officers who have completed 5 years of service

(D) Those who attained 55 years of age

உயர்கல்வி விடுப்பிற்கு தகுதியுள்ள அலுவலர்கள் யார்?

(A) தகுதிகாண் பருவத்தினர்

(B) ஐந்து ஆண்டுகள் பணி முடிக்காதவர்

(C) ஐந்து ஆண்டுகள் பணி முடித்த (அ) மற்றும் (ஆ) பிரிவு அலுவலர்கள்

(D) 55 வயது நிறைவு அடைந்தவர்

31. An officer to whom, the increment date falls on 1.1.2013 has been punished for 6 months of stoppage of increment without cumulative effect, the increment date for 2013 to him is ________________.

(A) 1.1.2013 (B) 1.6.2013

(C) 1.4.2013 (D) 1.7.2013

1.1.2013 -ல் ஊதிய உயர்வு பெற தகுதியுள்ள ஒரு அலுவலருக்கு திரள் விளைவின்றி 6 மாதங்கள் ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டு ஆணையிட்டதை தொடர்ந்து 2013-ல் அவரின் ஊதிய உயர்வு நாள்

(A) 1.1.2013 (B) 1.6.2013

(C) 1.4.2013 (D) 1.7.2013

32. The powers for according Technical Sanction for the maintenance works of value exceeding Rs. 25,000 but below Rs.2.00 lakh

(A) Union Overseer (B) Block Engineer

(C) Assistant Executive Engineer (D) Executive Engineer

ரூ.25,000-க்கு மேலான மற்றும் ரூ.2.00 இலட்சத்திற்கு குறைவான பராமரிப்பு பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகாரி யார்?

(A) ஒன்றிய பணிமேற்பார்வையாளர் (B) தொகுதி பொறியாளர்

(C) உதவி செயற் பொறியாளர் (D) செயற் பொறியாளர்

33. What percentage of amount will be eligible for lumpsum grant if the personal effects were carried by hired vehicle?

(A) 50% (B) 75%

(C) 100% (D) Not eligible

இரவல் வாகனங்களில் சொந்த உடமைகள் எடுத்துச் சென்றால் ஒட்டு மொத்த தொகையில் எத்தனை சதவிகிதம் மட்டும் அனுமதிக்கப்படும்?

(A) 50% (B) 75%

(C) 100% (D) தகுதியில்லை

34. An higher grade officer who has completed 25 years of service of the age of 55 years is went on voluntary retirement, he is eligible for ——————— years as weight age (சிறப்பு உயர்வு ஆண்டுகள்).

(A) 5 years (B) 4 years

(C) 3 years (D) 2 years

55 வயது பூர்த்தியடைந்த ஓர் உயர்பணி அலுவலர் 25 ஆண்டுகள் பணி முடித்த நிலையில் தன் விருப்பு ஓய்வு பெற்றால் அவருக்கு தகுதியான சிறப்பு உயர்வு ஆண்டுகள்

(A) 5 ஆண்டுகள் (B) 4 ஆண்டுகள்

(C) 3 ஆண்டுகள் (D) 2 ஆண்டுகள்

35. On which month, the Head of the Dept. will ask the subordinate offices to send the revised budget estimate for the current year and budget estimate (வரவு செலவு திட்ட மதிப்பீடு) for the next financial year

(A) January (B) March

(C) April (D) August

ஒவ்வொரு நிதி ஆண்டும் நடப்பு நிதி ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் அடுத்த நிதி ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பினை சார்நிலை அலுவலர்களிடமிருந்து துறை தலைவரால் எந்த மாதத்தில் கோரப்படும்.

(A) ஜனவரி (B) மார்ச்

(C) ஏப்ரல் (D) ஆகஸ்ட்

36. If one applied for UEL on MC. and it is necessary to send for Medical Board, within how many days it will be sent to Medical Board

(A) 7 (B) 3

(C) 5 (D) None of these

மருத்துவ சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு விண்ணப்பம் பெற்ற நாளிலிருந்து, மருத்துவ குழுவின் பரிந்துரை தேவைப்படும் பட்சத்தில் எத்தனை நாட்களுக்குள் மருத்துவ குழுவிற்கு அனுப்ப வேண்டும்.

(A) 7 (B) 3

(C) 5 (D) இவற்றில் ஏதுமில்லை

37. FTA in old station is Rs. 300 in New Station Rs. 600 FTA to be admissible during the joining time is ———————

(A) Rs. 300 (B) Rs. 600

(C) Rs. 900 (D) Not eligible

அறுதியிட்ட பயணப்படி, பழைய பணியிடத்தில் ரூ.300 புதிய பணியிடத்தில் ரூ.600 பணியேற்பிடைக் காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய அறுதியிட்ட பயணப்படி எவ்வளவு?

(A) ரூ. 300 (B) ரூ. 600

(C) ரூ. 900 (D) தகுதியில்லை

38. Who is the competent Authority for giving the Administrative Sanction for one work taken up by the Panchayat Union Council, to the Estimate Value of Rs. 25.00 lakhs?

(A) Panchayat Union Council (B) Assistant Director (pt.)

(C) District Collector (D) Director of Rural Development

ஊராட்சி ஒன்றிய குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்ட ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலான ஒரு வேலைக்கு நிர்வாக அனுமதி வழங்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

(A) ஊராட்சி ஒன்றிய குழு (B) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

(C) மாவட்ட ஆட்சித் தலைவர் (D) ஊரக வளர்ச்சி இயக்குநர்

39. CPS to be recovered from one who draws pay + grade pay + DA of Rs. 11,000/-

(A) Rs. 1,100/- (B) Rs. 1,320

(C) Rs. 1,060/- (D) None of the above

அடிப்படை ஊதியம் + தர ஊதியம் + அகவிலைப் படி மூன்றும் சேர்த்து ரூ.11,000 பெறுபவருக்கு பிடித்தம் செய்ய வேண்டிய பங்களிப்பு ஓய்வூதியம்

(A) ரூ. 1,100 (B) ரூ. 1,320

(C) ரூ. 1,060 (D) இவற்றில் ஏதுமில்லை

40. If one who has service of one year for retirement, how many percentage of part final withdrawal will be received from GPF without any reasons

(A) 50% (B) 75%

(C) 90% (D) 60%

பொது சேமநல நிதியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஓராண்டு பணிக்காலம் இருக்கும் போது எவ்வித காரணமும் குறிப்பிடாமல் எத்தனை சதவிகிதம் பகுதி இறுதித் தொகை பெறலாம்?

(A) 50% (B) 75%

(C) 90% (D) 60%

41. On promotion if one does not give option to fix pay will be fixed under the rule

(A) F.R. 22 (1) (a) (i) and F. R. 22(b) (B) F.R. 22(b)

(C) F.R. 27 (D) None of the these

ஒருவர் பதவி உயர்வில் ஊதியம் நிர்ணயம் செய்ய விடுப்புக் கடிதம் கொடுக்கவில்லையெனில் ———————— முறைப்படி ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும்.

(A) அவி 22(1) (a)(i) மற்றும் அவி 22(b) (B) அவி 22(b)

(C) அவி 27 (D) இவற்றில் ஏதுமில்லை

42. An officer who has to get selection grade, he should complete the ——————— years of qualifying service.

(A) 15 years (B) 10 years

(C) 20 years (D) 25 years

ஒரு அலுவலர் அவர் வகிக்கும் பதவியில் தேர்வு நிலை பெறுவதற்கு ——————— ஆண்டுகள் தகுதியுள்ள பணிக்காலம் பணியாற்றிருக்க வேண்டும்.

(A) 15 ஆண்டுகள் (B) 10 ஆண்டுகள்

(C) 20 ஆண்டுகள் (D) 25 ஆண்டுகள்

43. ———————% of amount should be deducted from Fixed Travelling Allowance when govt. vehicle is used

(A) 22 % (B) 50 %

(C) 75 % (D) 25 %

அறுதியிட்ட பயணப்படி அரசு ஊர்தியை பயன்படுத்தினால் ——————— சதவீதம் குறைக்கப்படும்.

(A) 22 % (B) 50 %

(C) 75 % (D) 25 %

44. If one complete the travel within 10 hours on the same day D.A. will be allowed at ——————— rate

(A) 30 % (B) 50 %

(C) 70 % (D) 100 %

அலுவல் பயணத்தை அன்றே 10 மணி நேரத்திற்குள் முடித்துக் கொண்டால் வழங்க வேண்டிய தினப்படி

(A) 30 % (B) 50 %

(C) 70 % (D) 100 %

45. Leave Travel concession will be granted to a Govt. servant who has only 2 years of service

(A) single fare (B) Double fare

(C) No permission (D) None of the these

இரண்டு ஆண்டுகள் மட்டுமே பணிக்காலம் உள்ள அலுவலருக்கு அனுமதிக்கப்படும் விடுப்பு கால பயணச் சலுகை

(A) ஒரு வழி (B) இரு வழி

(C) அனுமதிக்க இயலாது (D) இவற்றில் ஏதுமில்லை

46. An Officer drawing (தனி ஊதியம்) pay bill No. is

(A) Format No. 42 (B) Format No. 47

(C) Register No. 41C (D) Format No. 40

தன் ஊதியம் பெறும் அலுவலரின் ஊதியப்பட்டியல் படிவம் எண்.

(A) படிவம் எண். 42 (B) படிவம் எண். 47

(C) பதிவேடு எண். 41சி (D) படிவம் எண். 40

47. Final Modified Appropriation is to be sent on which month

(A) January (B) March

(C) August (D) October

இறுதியாக திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு அறிக்கை அனுப்ப வேண்டிய மாதம்

(A) ஜனவரி (B) மார்ச்

(C) ஆகஸ்ட் (D) அக்டோபர்

48. Officer who has the power to admit special disability leave

(A) Head of the Officer (B) District Officer

(C) Zonal Officer (D) Head of the Dept.

சிறப்பு இயலாமை விடுப்பு யாரால் ஒப்பளிப்பு செய்யப்படல் வேண்டும்.

(A) அலுவலக தலைவர் (B) மாவட்ட அலுவலர்

(C) மண்டல அலுவலர் (D) துறைத் தலைவர்

49. Every year on which date extension of permanent advance to be intimated to Accountant General

(A) January 1 (B) December 10

(C) April 1 (D) April 15

நிலை முன்பண நீட்டிப்பு வீதத்தை ஒவ்வொரு ஆண்டும் எந்த தேதியில் மாநில கணக்காயருக்கு தெரிவிக்க வேண்டும்.

(A) ஜனவரி 1 (B) டிசம்பர் 10

(C) ஏப்ரல் 1 (D) ஏப்ரல் 15

50. Under which rule a Govt. servant cannot claim the leave as a right

(A) F.R. 106 (B) F.R. 67

(C) F.R. 11 (D) F.R. 9

எந்த விதிகளின் படி அரசு அலுவலர் விடுப்பு பெறுவதற்கு ஒரு உரிமையாக கோர இயலாது

(A) அ.வி. 106 (B) அ.வி. 67

(C) அ.வி. 11 (D) அ.வி. 9

51. On attaining which age, pension of 20% to be increased to the pension drawing by retired Govt. servant

(A) 75 Age (B) 85 Age

(C) 90 Age (D) 80 Age

ஓய்வு பெற்ற ஒருவர் பெறும் ஓய்வூதியமானது எந்த வயதை அடைந்தவுடன் 20 சதவீதம் உயர்த்தி வழங்கப்படும்?

(A) 75 வயது (B) 85 வயது

(C) 90 வயது (D) 80 வயது

52. Who has the power to regulate the Emergency Fund of advance for contingency expenditure allotted from the consolidated fund based on the ratification from Legislative Assembly?

(A) Chief Secretary

(B) Chief Accounts Officer

(C) Accountant General

(D) Governor of the State

ஒருங்கிணைந்த நிதியிலிருந்து சட்டமன்றத்தின் பின்னேற்பினை பெறலாம் என்ற அடிப்படையில் வழங்கும் முன் பணத்தினை ஒதுக்கும் எதிர்பாரா செலவினங்களுக்கு அவசர நிதியை முறைப்படுத்துபவர் யார்?

(A) முதன்மை செயலர்

(B) முதன்மை கணக்கு அதிகாரி

(C) மாநிலக் கணக்காயர்

(D) மாநில ஆளுநர்

53. Monthly allowance sanctioned to a Govt. servant on suspension

(A) Special pay (B) Honorarium

(C) Personal pay (D) Subsistance allowance

தற்காலிக பணிநீக்கத்திலுள்ள ஒரு அரசு அலுவலருக்கு வழங்கப்படும் மாதாந்திர மான்யம்

(A) சிறப்பு ஊதியம் (B) மதிப்பூதியம்

(C) தனி ஊதியம் (D) பிழைப்பூதியம்

54. Eligible maternity leave to Women Govt. Servants

(A) 160 (B) 270

(C) 190 (D) 90

திருமணமான பெண் அரசு ஊழியருக்கு தகுதியான மகப்பேறு விடுப்பு நாட்கள்

(A) 160 (B) 270

(C) 190 (D) 90

55. Minimum pension on 1.1.2006

(A) 3050 (B) 23100

(C) 38500 (D) No

1.1.2006 முதல் குறைந்த பட்ச ஓய்வூதியம் எவ்வளவு

(A) 3050 (B) 23100

(C) 38500 (D) எதுவுமில்லை

56. UEL on private affairs is eligible for the basic servants who have completed of how many years of service?

(A) 20 years (B) 10 years

(C) 5 years (D) 15 years

அடிப்படைப் பணியில் எத்தனை ஆண்டுகள் பணி முடித்தால் சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்புக்கு தகுதியுண்டு

(A) 20 ஆண்டுகள் (B) 10 ஆண்டுகள்

(C) 5 ஆண்டுகள் (D) 15 ஆண்டுகள்

57. Minimum qualifying service needed for getting pension

(A) 20 years (B) 10 years

(C) 5 years (D) 30 years

ஓய்வூதியம் பெற குறைந்தபட்ச நிகர தகுதியான பணிக்காலம் எத்தனை ஆண்டுகள்?

(A) 20 ஆண்டுகள் (B) 10 ஆண்டுகள்

(C) 5 ஆண்டுகள் (D) 30 ஆண்டுகள்

58. For calculating joining time on transfer, if travel by train, how many kms. for one day

(A) 320 km. (B) 400 km.

(C) 300 km. (D) 160 km.

பணியேற்பிடைக் காலம் கணக்கிட மாறுதலின் போது ரயிலில் பயணம் செய்தல் ஒரு நாள் எத்தனை கி.மீக்கு பயணம் செய்யலாம்?

(A) 320 கி.மீ. (B) 400 கி.மீ.

(C) 300 கி.மீ. (D) 160 கி.மீ.

59. Incidental Expenditure is admissible for minimum distance of

(A) 80 km. (B) 160 km.

(C) 120 km. (D) 100 km.

இடைநிகழ்வுச் செலவு அனுமதிக்க தேவையான குறைந்த பட்ச பயணத் தொலைவு எவ்வளவு கி.மீ.க்கு மேல்

(A) 80 கி.மீ. (B) 160 கி.மீ.

(C) 120 கி.மீ. (D) 100 கி.மீ.

60. How many percentage of advance that can be drawn of the estimated traveling expenditure for Leave Travel Concession?

(A) 75% (B) 50%

(C) 80% (D) 90%

விடுப்பு கால பயணச் சலுகை துய்க்க மதிப்பிடப்பட்ட பயணச் செலவில் முன்பணமாக எவ்வளவு சதவிகிதம் பெறலாம்?

(A) 75% (B) 50%

(C) 80% (D) 90%

61. After how many years one Govt. servant who has been lost will be considered as died?

(A) 5 years (B) 6 years

(C) 7 years (D) 8 years

காணாமல் போன அரசு ஊழியர் எத்தனை ஆண்டுகள் கழித்து இறந்து விட்டதாக கருதப்படுவார்?

(A) 5 ஆண்டுகள் (B) 6 ஆண்டுகள்

(C) 7 ஆண்டுகள் (D) 8 ஆண்டுகள்

62. How many times permanent advance can be recouped with vouchers in one month?

(A) one time (B) two times

(C) three times (D) No time limit

நிலையான முன்பணம் ஒரு மாதத்தில் எத்தனை முறை பட்டியலிட்டு சரிகட்டிக் கொள்ளலாம்?

(A) ஒரு முறை (B) இரண்டு முறை

(C) மூன்று முறை (D) வரையரையில்லை

63. An officer eligible for encashment of TA bill without getting counter signature

(A) RDO (B) Tahsildar

(C) Deputy Collector (D) DRO

பயணப்படி பட்டியல்கள் மேலொப்பம் பெறாமலே பணமாக்கத்தக்க அலுவலர்

(A) வருவாய் கோட்டாட்சியர் (B) வருவாய் வட்டாட்சியர்

(C) துணை ஆட்சியர் (D) மாவட்ட வருவாய் அலுவலர்

64. Minimum period for keeping the Pay Bills and Acquaintances in safe custody

(A) 30 years (B) 40 years

(C) 50 years (D) 15 years

ஊதியப் பட்டியல்கள் மற்றும் செலவுச் சீட்டுகள் பாதுகாக்கப்பட வேண்டிய குறைந்த அளவு காலம்

(A) 30 ஆண்டுகள் (B) 40 ஆண்டுகள்

(C) 50 ஆண்டுகள் (D) 15 ஆண்டுகள்

65. An Officer who has surrendered Earned leave of 15 days on 2.7.2014 is eligible to surrender his Earned leave of 30 days on

(A) 2.7.2016 (B) 1.7.2016

(C) 1.1.2017 (D) 30.6.2016

2.7.2014 அன்று 15 நாட்கள் ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்த அலுவலர், அடுத்த 30 நாட்கள் ஈட்டிய விடுப்பினை ஒப்படைப்பு செய்ய தகுதியான நாள்

(A) 2.7.2016 (B) 1.7.2016

(C) 1.1.2017 (D) 30.6.2016

66. An Officer who has availed LTC has to submit his TA bills within how many months?

(A) 1 month (B) 2 months

(C) 3 months (D) 6 months

விடுப்புக் கால பயண சலுகை அனுபவித்த அலுவலர், ____________ காலத்திற்குள் பயண பட்டியல் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

(A) 1 மாதம் (B) 2 மாதங்கள்

(C) 3 மாதங்கள் (D) 6 மாதங்கள்

67. Report to be filed at the end of the financial year is

(A) Budget estimate (B) Revised Estimate

(C) Final modified appropriation (D) Final exp. savings/Surrender Statement

நிதியாண்டு இறுதியில் தாக்கல் செய்யப்பட வேண்டிய அறிக்கை

(A) வரவு, செலவு மதிப்பீடு (B) திருத்திய மதிப்பீடு

(C) இறுதி திருத்திய மதிப்பீடு (D) இறுதி செலவு சேமிப்பு / ஒப்புவிப்பு அறிக்கை

68. How many days, the amount of encashment of the bills to be paid to the concerned?

(A) 30 days (B) 60 days

(C) 90 days (D) 20 days

பட்டியலுக்கான தொகை காசாக்கப்பட்ட பின்னர் அத்தொகையை எத்தனை நாட்களுக்குள் உரியவருக்கு வழங்கப்பட வேண்டும்?

(A) 30 நாட்கள் (B) 60 நாட்கள்

(C) 90 நாட்கள் (D) 20 நாட்கள்

69. The interval period between two temporary advance from General Provident Fund in

(A) 6 months (B) 1 year

(C) 2 years (D) 1 month

பொது சேமநல நிதியிலிருந்து இரண்டு தற்காலிக முன் பணம் பெறுவதற்கான கால இடைவெளி ____________ இருத்தல் வேண்டும்.

(A) 6 மாதங்கள் (B) ஒரு வருடம்

(C) இரண்டு வருடங்கள் (D) ஒரு மாதம்

70. The date from which earned leave of 240 days will be in credit

(A) 30.10.1987 (B) 01.11.1987

(C) 01.07.1994 (D) 01.01.1995

240 நாட்கள் ஈட்டிய விடுப்பினை ———————— நாளிலிருந்து இருப்பில் வைத்துக் கொள்ளலாம்.

(A) 30.10.1987 (B) 01.11.1987

(C) 01.07.1994 (D) 01.01.1995

71. The minimum qualifying service to get DCRG (Death Cum Retirement Gratuity) is ———————— years

(A) 10 (B) 7

(C) 5 (D) 20

இறப்பு மற்றும் பணி ஓய்வுப் பணிக்கொடை பெற தகுதி வாய்ந்த வரன்முறைப்படுத்தப்பட்ட பணிக்காலம் ———————— ஆண்டுகள் ஆகும்.

(A) 10 (B) 7

(C) 5 (D) 20

72. Eligible preparation days on transfer beyond 8 km.

(A) 2 days (B) 6 days

(C) 1 day (D) 8 days

மாவட்டங்களில் 8 கி.மீ. தூரத்திற்கு அதிகமான உள்ள இடத்திற்கு பணியிட மாறுதல் அளிக்கப்பட்டால், அனுமதிக்கப்படும் பணி மாறுதலுக்கான தயாரிப்பு காலம் ———————— நாட்கள்.

(A) 2 நாட்கள் (B) 6 நாட்கள்

(C) 1 நாள் (D) 8 நாட்கள்

73. ————————% is to be deducted from Pay, Grade pay + DA under Contributory Pension Scheme.

(A) 20 (B) 15

(C) 10 (D) 5

பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியம் தொடர்பாக, ஊதியம், தர ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவைகளிலிருந்து ————————% பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

(A) 20 (B) 15

(C) 10 (D) 5

74. Increment Certificate Form No. is

(A) TNTC 42 (B) TNTC 47

(C) TNTC 49 (D) TNTC 22

ஊதிய உயர்வு ஒப்பளிப்பிற்கான சான்றிதழ் (படிவம் எண்)

(A) TNTC 42 (B) TNTC 47

(C) TNTC 49 (D) TNTC 22

75. On which date, the joining time is to be calculated for the officer who got transferred while on compulsory wait?

(A) Date of order

(B) the next day of the order date

(C) The date on which order served

(D) None of these

ஒருவர் கட்டாய காத்திருப்பில் இருக்கும் போது மாற்றல் ஆணை கிடைத்தால் எந்த தேதியிலிருந்து பணியேற்பிடைக்காலம் கணக்கிடப்படும்?

(A) ஆணையின் தேதி முதல்

(B) ஆணையின் தேதிக்கு அடுத்த நாள் முதல்

(C) ஆணை அலுவலருக்கு சார்பு செய்த நாள் முதல்

(D) எதுவுமில்லை

76. The pay which is given to a Govt. servant to meet out the loss due to pay revision

(A) Special pay (B) Honorarium

(C) Personal pay (D) Incentive pay

ஊதிய திருத்தம் காரணமாக ஊதிய இழப்பில் இருந்து அரசு ஊழியரை காக்க வழங்கப்படும் ஊதியம்

(A) சிறப்பூதியம் (B) மதிப்பூதியம்

(C) தனி ஊதியம் (D) ஊக்க ஊதியம்

77. A Govt. Officer has to apply for crediting the unavailed joining time in his Earned leave account within

(A) 1 month (B) 3 months

(C) 6 months (D) 1 year

ஒரு அரசு அலுவலர் அனுபவிக்காத பணியேற்பிடைக் காலத்தினை ஈட்டிய விடுப்பு கணக்கில் வரவு வைக்க விண்ணப்பிக்க வேண்டிய காலக்கெடு

(A) 1 மாதத்திற்குள் (B) 3 மாதத்திற்குள்

(C) 6 மாதத்திற்குள் (D) 1 வருடத்திற்குள்

78. Eligible FTA to a Govt. servant during the joining time

(A) FTA availed in the old station

(B) Eligible FTA in the new Station

(C) Amount of the old station and new station whichever is less

(D) No FTA

ஒரு அரசு ஊழியருக்கு பணியேற்பிடைக் காலத்தில் தகுதியுள்ள நிலையான பயணப்படியை குறிப்பிடுக.

(A) பழைய இடத்தில் பெற்ற அறுதியிட்ட பயணப்படி

(B) புதிய இடத்தில் தகுதியுள்ள அறுதியிட்ட பயணப்படி

(C) மேற்கண்ட இரண்டில் குறைவான தொகை

(D) நிலையான பயணப்படி கிடையாது

79. A Govt. servant who goes for higher studies is eligible to avail the following leave with study leave

(A) UEL on PA

(B) UEL on MC

(C) EOL with MC

(D) No leave is eligible

உயர்கல்வி விடுப்பில் செல்லும் அரசு ஊழியருக்கு உயர்கல்வி விடுப்போடு கீழ்க்கண்டவற்றில் எந்த விடுப்பினை பெற தகுதியுண்டு?

(A) சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு

(B) மருத்துவச் சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு

(C) மருத்துவ சான்றுடன் கூடிய அசாதாரண விடுப்பு

(D) விடுப்பு அனுபவிக்க தகுதியில்லை

80. Leave which is not eligible for increment

(A) Earned leave

(B) Leave on loss of pay with MC

(C) UEL on M.C

(D) Leave on loss of pay without M.C

ஊதிய உயர்வு வழங்குவதற்கு தகுதியில்லாத விடுப்பு

(A) ஈட்டிய விடுப்பு

(B) மருத்துவ சான்றின் பேரில் ஊதியமில்லா விடுப்பு

(C) மருத்துவ சான்றின் பேரில் ஈட்டா விடுப்பு

(D) மருத்துவச் சான்று அல்லாத ஊதியமில்லாத விடுப்பு

ROUGH WORK

**ROUGH WORK**